

முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் அவர்கள் தலைமையில் நேற்று (2.08.2024) பள்ளிக்கல்வித் துறை சார்பில் சென்னை, அண்ணா நூற்றாண்டு நூலகத்தில் நடைபெற்ற முதன்மை உயர்கல்வி நிறுவனங்களுக்கு கல்வி பயிலச் செல்லும் அரசுப் பள்ளி மாணவர்களுக்கான பாராட்டு விழாவில், காஞ்சிபுரம் மாவட்டத்தைச் சேர்ந்த மாற்றுத்திறனாளி மாணவர் கிஷோர் அவர்கள் தமிழ்நாடு தேசிய சட்டப் பல்கலைக் கழகத்தில் உயர்கல்வி பயில செல்வதையொட்டி, அம்மாணவருக்கு பாராட்டுச் சான்றிதழ் மற்றும் மடிக்கணினியை வழங்கி வாழ்த்தினார். இந்த நிகழ்ச்சியில் உயர்கல்வித் துறை அமைச்சர் முனைவர் க. பொன்முடி, மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் மா. சுப்பிரமணியன், இந்து சமய அறநிலையத் துறை அமைச்சர் பி.கே.சேகர்பாபு, பள்ளிக் கல்வித்துறை அமைச்சர் அன்பில் மகேஸ் பொய்யாமொழி, பெருநகர சென்னை மாநகராட்சி துணை மேயர் மு.மகேஷ் குமார், பள்ளிக்கல்வித் துறைச் செயலாளர் திருமதி சோ. மதுமதி, சென்னை இந்திய தொழில்நுட்பக் கழகத்தின் இயக்குநர் முனைவர் வி.காமகோடி, தமிழ்நாடு மாதிரிப் பள்ளிகள் உறுப்பினர் செயலர் இரா. சுதன் மற்றும் அரசு உயர் அலுவலர்கள் கலந்து கொண்டனர்.



முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் அவர்கள் தலைமையில் நேற்று (2.08.2024) பள்ளிக்கல்வித் துறை சார்பில் சென்னை, அண்ணா நூற்றாண்டு நூலகத்தில் நடைபெற்ற முதன்மை உயர்கல்வி நிறுவனங்களுக்கு கல்வி பயிலச் செல்லும் அரசுப் பள்ளி மாணவர்களுக்கான பாராட்டு விழாவில், பள்ளிக் கல்வித் துறைக்கு தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வாணையத்தின் வாயிலாக 448 உதவியாளர் பணியிடங்களுக்கு தெரிவு செய்யப்பட்டவர்களுக்கு பணிநியமன ஆணைகளை வழங்கிடும் அடையாளமாக 5 நபர்களுக்கு பணிநியமன ஆணைகளை வழங்கினார். 5 இந்த நிகழ்ச்சியில் உயர்கல்வித் துறை அமைச்சர் முனைவர் க. பொன்முடி, மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் மா. சுப்பிரமணியன், இந்து சமய அறநிலையத் துறை அமைச்சர் பி.கே. சேகர்பாபு, பள்ளிக் கல்வித்துறை அமைச்சர் அன்பில் மகேஸ் பொய்யாமொழி, பெருநகர சென்னை மாநகராட்சி துணை மேயர் மு. மகேஷ் குமார், பள்ளிக்கல்வித் துறைச் செயலாளர் திருமதி சோ.மதுமதி, சென்னை இந்திய தொழில்நுட்பக் கழகத்தின் இயக்குநர் முனைவர் வி.காமகோடி, தமிழ்நாடு மாதிரிப் பள்ளிகள் உறுப்பினர் செயலர் இரா. சுதன் மற்றும் அரசு உயர் அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

## அருந்ததியினருக்கு உள்ஒதுக்கீடு: கழக ஆட்சியில் முதலமைச்சராக இருந்த முத்தமிழறிஞர் கலைஞர் அன்று போட்ட உத்தரவை இன்று உச்சநீதிமன்றம் உறுதி செய்தது!

# நமது 'திராவிட மாடல்' பயணத்திற்குக் கிடைத்த அங்கீகாரம்!

## முதல்வர் மு.க.ஸ்டாலின் கருத்து!

**சென்னை,ஆக.3-**

**உள்ஒதுக்கீடு குறித்து கழக ஆட்சியில் முதலமைச்சராக இருந்த முத்தமிழறிஞர் கலைஞர் அவர்கள் அன்று போட்ட உத்தரவை இன்று உச்சநீதிமன்றம் உறுதி செய்தது! என்று உச்சநீதிமன்ற ஏழு நீதிபதிகள் அமர்வு பிறப்பித்த உத்தரவு குறித்து கருத்துத் தெரிவித்துள்ள முதல்வர் மு.க. ஸ்டாலின் அவர்கள் "நமது திராவிட மாடல் பயணத்திற்குக் கிடைத்த அங்கீகாரம்" என்று கூறியுள்ளார்.**



நாட்டில் தற்போது சமூக ரீதியாக இடஒதுக்கீடு முறை வருகிறது. பட்டியல் மற்றும் பழங்குடியினர் இட ஒதுக்கீட்டில் தமிழ்நாடு, பஞ்சாப், அரியானா ஆகிய மாநிலங்கள் ஏற்கனவே உள் ஒதுக்கீடு வழங்கியுள்ளது. இதில் தமிழ்நாடு, பட்டியலின இட ஒதுக்கீட்டில் பழங்குடியினருக்கு என்று 3% உள் இட ஒதுக்கீடு வழங்கியுள்ளது.

கடந்த 2009-ம் ஆண்டு கலைஞர் முதலமைச்சராக இருந்த காலத்தில் உள்ளாட்சித் துறை அமைச்சராக இருந்த மு.க.ஸ்டாலின் அவர்கள், அருந்ததியினருக்கு 3% இட ஒதுக்கீடு சட்ட மசோதாவை தாக்கல் செய்தார். அப்போது கலைஞருக்கு உடல்நிலை பிரச்சனை காரணமாக மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டிருந்த சூழலில், ஒரு கடிதம் மூலம் மு.க. ஸ்டாலின் அவர்களுக்கு அனுப்பி, சட்டப்பேரவையில் வாசித்தார்.

இதையடுத்து அருந்ததியினருக்கு 3% உள் ஒதுக்கீடு வழங்கி சட்டம் இயற்றப்பட்டது. எனினும் இந்த சட்டத்தை எதிர்த்து தமிழ்நாடு உள்ளிட்ட மாநிலங்களுக்கு எதிராக வழக்கு தொடரப்பட்டது. இந்த வழக்கு விசாரணை நடைபெற்று வந்த நிலையில், கடந்த 2020 - ஆம் ஆண்டு தமிழ்நாடு அரசின் அருந்ததியர் உள் ஒதுக்கீடு சட்டம் செல்லுபடி ஆகும் என்று உச்ச நீதிமன்றம் தீர்ப்பளித்தது.

ஆனால், ஏற்கனவே, உள்ஒதுக்கீட்டை அனுமதிக்கக்கூடாது என்று ஆந்திர மாநில வழக்கில் 2004ஆம் ஆண்டு உச்சநீதிமன்றத்தின் ஐந்து நீதிபதிகள் அமர்வு தீர்ப்பு வழங்கியிருந்தது. இதன் காரணமாக இந்த வழக்கை 7 நீதிபதிகள் அமர்வுக்கு உச்சநீதிமன்றம் பரிந்துரை செய்திருந்தது.

இதேபோன்று பஞ்சாப், ஹரியானா மாநில வழக்குகளும் ஏழு நீதிபதிகள் அமர்வுக்கு பரிந்துரை செய்யப்பட்டிருந்தது. இந்த வழக்குகள் ஒட்டுமொத்தமாக கடந்த பிப்ரவரி மாதம் 7 நீதிபதிகள் அமர்வில் விசாரணை முடிந்து தீர்ப்பு ஒத்திவைக்கப்பட்டிருந்தது.

இந்நிலையில், இந்த வழக்கில் தலைமை நீதிபதி சந்திர சூட் தலைமையிலான 7 நீதிபதிகள் அமர்வு நேற்று முன்தினம் தீர்ப்பு வழங்கியது. அதில், பட்டியலின, பழங்குடியினருக்கான உள்ஒதுக்கீட்டை மாநில அரசுகள் வழங்க முடியும் என்று அருந்ததியர் உள் இடஒதுக்கீடு தொடர்பான தமிழ்நாடு அரசின் சட்டம் செல்லும் என்று 6 நீதிபதிகள் ஒருமித்த தீர்ப்பு வழங்கினர்.

பட்டியலினத்தவரின் உட்பிரிவுகள் எதுவும் பட்டியல் வகுப்பினர் என்ற வரையறையில் இருந்து விலக்கப்படாத காரணத்தால் உள் ஒதுக்கீடு வழங்கலாம் என்றும், உள்ஒதுக்கீடு, அரசியல் சட்டத்தின் 14-வது பிரிவை மீறவில்லை என்றும் குறிப்பிட்ட நீதிபதிகள், பட்டியலின, பழங்குடி யினத்தவர்களுக்கு இட ஒதுக்கீடு வழங்க தடையில்லை என்றும் தெரிவித்தனர். பட்டியலினத்தவர்களும், பழங்குடியினரும் எதிர்கொள்ளும் பாகுபாடு காரணமாக அவர்களால் எளிதில் முன்னிலைக்கு வர முடியவில்லை என்று உச்சநீதிமன்றம் தெரிவித்துள்ளது. எனவே அரசியல் சாசன பிரிவு 14, துணை வகைப்பாட்டை அனுமதிக்கிறது என்றும் உச்சநீதிமன்றம் தனது தீர்ப்பில் தெரிவித்துள்ளது.

கடந்த 2009- ஆம் ஆண்டு கலைஞர் ஆட்சியில் கொண்டு வரப்பட்ட அருந்ததியினருக்கு உள் இடஒதுக்கீடு செல்லும் என்று உச்சநீதிமன்றத் தீர்ப்புக்கு தற்போது அனைவரும் வரவேற்பு அளித்து வருகின்றனர்.

அந்த வகையில் முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் தனது சமூக வலைதள பக்கத்தில் குறிப்பிட்டுள்ளதாவது :-

**ஒடுக்கப்பட்ட மக்களின் சமூக விடுதலைக்கான சமூக நீதியை நிலைநாட்டும் நமது திராவிட மாடல் பயணத்துக்கான மற்றுமோர் அங்கீகாரமாக இன்றைய உச்சநீதிமன்றத் தீர்ப்பு அமைந்திருக்கிறது!**

**முறையாகக் குழு அமைத்து, அதன்மூலம் திரட்டப்பட்ட தரவுகளை அடிப்படையாகக் கொண்டு அருந்ததியர் சமுதாயத்திற்கான 3% உள்ஒதுக்கீட்டைத் தலைவர் கலைஞர் கொடுக்க, அதற்கான சட்ட முன்வடிவைப் பேரவையில் நான் அறிமுகம் செய்து, நிறைவேற்றித் தந்தோம். இந்தச் சட்டத்தை உச்சநீதிமன்றத்தின் ஏழு நீதிபதிகள் கொண்ட அமர்வு உறுதிசெய்திருப்பது பெருமகிழ்ச்சியளிக்கிறது.**

இவ்வாறு முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் தமது சமூக வலைதளத்தில் பதிவிட்டுள்ளார்.

## நாகர்கோவில் மாநகராட்சி மாமன்ற கூட்டம்!

### மாநகராட்சி மேயர் ரெ.மகேஷ் தலைமையில் நடைபெற்றது!

நாகர்கோவில், ஆக். 3 -


நாகர்கோவில் மாநகராட்சி, இயல்பு மாமன்ற கூட்டமானது மாமன்ற கூட்ட அரங்கில் 31.7.2024 அன்று கன்னியாகுமரி கிழக்கு மாவட்டச் செயலாளர், நாகர்கோவில் மாநகராட்சி மேயர் ரெ.மகேஷ் தலைமையில் நடைபெற்றது. ஆணையர் நிஷாந்த் கிருஷ்ணா, துணை மேயர் மேரி பிரின்சி லதா ஆகியோர் முன்னிலை வகித்தனர்.

கூட்டத்தின் தொடக்கத்தில் நாகர்கோவில் மாநகராட்சி தொடர் கட்டுமான பகுதிகளில் கட்டடம் கட்ட விதிகளில் தளர்வு அளித்து அரசாணை வெளியிட்ட கழகத் தலைவர், தமிழ்நாடு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்களுக்கும், வீட்டுவசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித் துறை அமைச்சர் சு.முத்துசாமி அவர்களுக்கும் மற்றும் நகராட்சி நிர்வாகத்துறை அமைச்சர் கே.என்.நேரு அவர்களுக்கும் நன்றி தெரிவித்து ஒருமனதாக தீர்மானம் நிறைவேற்றப்பட்டது. கூட்டத்தில் நாகர்கோவில் மாநகராட்சி பகுதிகளில் மேற்கொள்ளப்பட்டு வரும் வளர்ச்சி திட்ட பணிகள், மேலும் மேற்கொள்ள வேண்டிய பணிகள் குறித்து விவாதிக்கப்பட்டது. நாகர்கோவில் மாநகராட்சி பகுதிகளில் நடைபெற்று வரும் அம்ரூத் குடிநீர் திட்டம், பாதாள சாக்கடை திட்டம் தொடர்பாகவும் விவாதிக்கப்பட்டது. நாகர்கோவில் மாநகராட்சி பகுதியில் நாய்கள் தொல்லை நாளுக்கு நாள் அதிகரித்து வருகிறது. அதை கட்டுப்படுத்த நடவடிக்கை எடுக்கப்படும் எனவும், நாகர்கோவில் மாநகராட்சியோடு தற்போது இணைக்கப்பட்ட தெங்கம்புதூர், ஆளூர் பகுதிகளுக்கு உட்பட்ட மக்களுக்கு தங்குதடையின்றி குடிநீர் வழங்கப்படும் என மாநகராட்சி மேயர் ரெ.மகேஷ் தெரிவித்தார்.

கூட்டத்தில் மாநகர் நல அலுவலர் மருத்துவர் ராம்குமார், மாநகராட்சி நகரமைப்பு அலுவலர் வேலாயுதம், உதவி ஆணையாளர் பால்சுந்தரம், உதவி செயற்பொறியாளர் மாலா, மண்டல தலைவர்கள், மாமன்ற உறுப்பினர்கள் மற்றும் மாநகராட்சி அதிகாரிகள் கலந்து கொண்டனர்.

## திராவிட இயக்க தீரர்கள் நினைவு நாள்

### என்.வி. நடராசன்
### ஆகஸ்ட் 3 (1975)



சென்னை மாவட்டக் கழகத்தின் முதலாம் செயலாளர். கழகச் சட்டதிட்டங்களை உருவாக்குவதற்கு அமைக்கப்பட்ட சட்டதிட்டத் திருத்தக்குழுவின் முதல் செயலாளர், கழகத்தின் முதல் அமைப்புச் செயலாளர் மற்றும் தி.மு.கழகத்தில் மிக நீண்டகாலம் தலைமை நிலையச் செயலாளராக இருந்தவர் என்ற பெருமைக்குரியவர்.

அதுமட்டுமல்லாமல், கலைஞர் அவர்கள் முதல்வர் பொறுப்பேற்ற பிறகு, இந்தியாவிலேயே வேறு எந்த மாநிலத்திலும் இல்லாத வகையில் புதுமை என்ற புகழ் பெற்ற 'பிற்படுத்தப்பட்டோர் நலத்துறை' அமைந்தபோது, அதன் அமைச்சராக முதலில் பதவி வகித்தவரும் இவர்தான்.

'திராவிடன்' என்ற இதழை துவக்கி கழகத்தின் போர்முரசமாய் அதை நடத்தி வந்தார்.

இந்தி எதிர்ப்பு, விலைவாசி உயர்வு உள்ளிட்ட பல அறப்போராட்டங்களில் கலந்து கொண்டு சிறை சென்றவர்.

தலைவர் கலைஞர் அவர்கள் "நமது தி.மு.கழக மாலடோவ் என்.வி.என்" என பெருமைப்படக்கூறியது குறிப்பிடத்தக்கது.

தலைமைக் கழகம்
தி.மு.க.